1974 சனவரி 23]

மாயூரம்-புங்கனூர் பேருந்து வழித்தடம்

** 119 வினா—***திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்திலிருந்து பட்டவர்த்தி மதகடி வழியாக புங்கனூருக்கு பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாயூரத்திலிருந்து பட்டவர்த்தி வழியாகப் புங்கனூர் செல்லும் வழித்தடத்தில், தற்காலிக அனுமதியின் பேரில் சோழன் போக்குவரத்துக் கழகம் 1—7—1973 முதல் ஒரு பேருந்து விட்டு வருகிறது.

தேனி-இராஜபாளையம் பேருந்து வழித்தடம்

** 120 வினா.—***திரு. நா. வெ. குருசாமி:** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேனி-இராஜபாளையம் இடையில் அரசு விரைவுப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, தேனிக்கும் ராஜ பாளையத்திற்கும் சுமார் 70 முதல் 75 மைல்கள் வரையில் உள்ளது. தேனியும், ராஜபாளையமும் வியாபார ஸ்தலமாக இருப்பதால் பொது மக்களின் வசதியை முன்னிட்டு அங்கே விரைவுப் பேருந்துகள் விடுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் விரைவுப் பேருந்துகள் 200 கிலோ மீட்டர்களுக்கு மேல் விடுவதுதான் சாத்தியமானது என்ற அடிப்படையில் இயங்குகிறது. பாண்டியன் போக்குவரத்துக் கழகம் தேவைப்பட்டால் இதைப் பரிசிலிக்கும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS